Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.289/2016

**Depositions of PW- 4**

| Name | திரு.பால்கணேசன் | Occupation | தலைமை காவலர் |
|---|---|---|---|
| Father's name | அய்யனார் | Calling | |
| Village | மம்சாபுரம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of November 2025.

12.11.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்ட குற்றபுலனாய்வுத்துறையில் Q பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2015 ம் தேதி மதியம் சுமார் 02.15 மணியளவில் வன்னியம்பட்டி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்காணித்து வந்தபோது மொட்டைமலை இலங்கை அகதிகள் முகாமிற்கு மேற்கு பக்கத்தில் உள்ள கல்குவாரியில் அனுமதியில்லாமல் வெடிபொருட்கள் பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி. சாந்தாலட்சுமி, சார்பு ஆய்வாளர் ராதா, சார்பு ஆய்வாளர் பாலகணேஷ், கிராம நிர்வாக அலுவலர் அழகர்ராஜா, கிராம உதவியாளர் சமுத்திரக்கனி, மற்றும் நான் ஆகியோர் சேர்ந்து மேற்படி கல்குவாரிக்கு சென்றோம். மேற்படி இடத்திற்கு சென்று விசாரித்தபோது அந்த இடத்தின் உரிமையாளர் சுந்தரபாண்டியன் என்பது தெரியவந்தது. ஆனால் அவர் நாங்கள் சென்றபோது அங்கு இல்லை. அந்த இடத்தின் மேலாளரான சாமிஅண்ணன் என்பவர் அங்கு இருந்தார். அங்கு சென்று காவல் ஆய்வாளர் விசாரணை செய்தபோது மண்ணிற்கு அடியில் 110 எண்ணம் டெட்டனேட்டர்களும், சுமார் 600 மீட்டர் டெட்டனேட்டர் கார்டுகளும், சுமார் 130 எண்ணம் ஜெல்லேட்டின் குச்சிகளும், சுமார் 60 மீட்டர் கரி மருந்து திரியும், இருந்தது. அதனை எடுத்து மேற்படி

சாமிஅண்ணனிடம் விசாரித்தபோது அவர் மேற்படி பொருட்கள் தங்களுடையது அல்ல என்றும். திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலிலுள்ள பாலன் Explosive வைத்திருப்பவருக்கு சொந்தமானவை என்றும் கூறினார். மேற்படி பொருட்களை கைப்பற்றி வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி சம்பவயிடத்திற்கு யார் உத்தரவின்பேரில் சென்றோம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, காவல் ஆய்வாளருடன் சென்றோம். மேற்படி இடத்தில் வெடி வெடிப்பதாக யார் தகவல் கொடுத்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இடத்திற்கு காவல் வாகனத்தில் நானும், காவல் ஆய்வாளரும், சார்பு ஆய்வாளர் ராதா, சார்பு ஆய்வாளர் பாலகணேஷ் ஆகியோரும் மதியம் சுமார் 02.15 மணிக்கு சென்றோம். மேற்படி சம்பவயிடத்தில் சாமிஅண்ணன் மட்டும் தான் இருந்தார். மேற்படி சம்பவயிடத்திலிருந்து சுமார் 04.00 மணியளவில் காவல்நிலையம் சென்றோம். மேற்படி பொருட்களை ட்ரம் வடிவிலான ஒரு பொருளில் வைத்து மண்ணிற்கு அடியில் வைத்திருந்தார்கள். மேற்படி ட்ரம் வடிவிலான பொருளை கைப்பற்றினார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி சம்பவம் தொடர்பாக நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் தொடர்பாக வேறு யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் காவல் ஆய்வாளர் காவல்நிலையத்திற்குள் சென்று பேசிக்கொண்டிருந்தார் புகார் கொடுத்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இடத்திற்கு நான் சென்றேன் என்பது தொடர்பாக ஏதேனும் ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காவல்நிலையத்திற்கு சென்றபின் வழக்கு பதிவு செய்யப்பட்டதா அல்லது மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்ன செய்யப்பட்டது என்பது தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. பொருட்களை வண்டியிலிருந்து எடுத்து மட்டும் என்னை வைக்க சொன்னார்கள். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது மட்டும் எனக்கு தெரியும். என்னை வன்னியம்பட்டி காவல்நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தார். விசாரணை செய்த தேதி எனக்கு நியாபகமில்லை.

உண்மையில் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எனது மேல் அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. மேற்படி சம்பவயிடத்திற்கு சென்று மேற்படி பொருட்களை கைப்பற்றிவிட்டு காவல்நிலையம் வந்துவிட்டோம் என்றாலும் அதை தவிர வேறு எந்த நடவடிக்கைகளும் நடைபெறவில்லை என்றாலும் சரிதான். மேற்படி எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை காவலர்கள் சொல்லி கொடுத்துதான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.289/2016

**Depositions of PW- 5**

| Name | திரு.கந்தசாமி | Occupation | பணி ஓய்வு |
|---|---|---|---|
| Father's name | வீராசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of November 2025.

<u>12.11.2025</u>

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 18.06.2015 ம் தேதி நான் வன்னியம்பட்டி காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது விருதுநகர் மாவட்ட Q பிரிவு குற்றபுலனாய்வுத்துறை காவல்ஆய்வாளர் சாந்தாலட்சுமி அவர்கள் கொடுத்த தனி அறிக்கையை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.106/2015 பிரிவு 5 உ/இ 9(b)(1)(b) Indian Explosive Act ஆக வழக்கு பதிவு செய்து இதன் தனி அறிக்கையும் மற்றும் வழக்கின் முதல் தகவல் அறிக்கையினை இணைத்து JM II நீதிமன்றம் திருவில்லிபுத்தூர் அவர்களுக்கும் மற்ற முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்மந்தபட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கின் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். **தனி அறிக்கை அசாஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

மேற்படி தனி அறிக்கையை Q பிரிவு காவல் ஆய்வாளர் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் எங்கள் காவல்நிலைய காவல் ஆய்வாளரிடம் தான் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி தனிஅறிக்கை எந்த மையில் எழுதப்பட்டிருந்தது என்றால் கருப்பு மையால் எழுதப்பட்டிருந்தது. மேற்படி தனி அறிக்கையில் அடித்தல் திருத்தல்கள் காணப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி தனி அறிக்கையை எங்கு வைத்து எழுதினார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது தவிர மற்ற சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் எதிரியை காவல் ஆய்வாளர் கைது செய்ததும், காவல் ஆய்வாளர் அத்தாட்சியின் மூலம் பொருட்களை கைப்பற்றியது பற்றி எனக்கு தெரியும். மேற்படி நான் சொன்னமாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தனி அறிக்கை பெறப்படவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.